Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 05, 2022

புதன்கிழமை ஒக்டோபர் 05, 2022 | ஒளி: 08 கதிர்: 114 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 2023 ஆண்டுக்கான செலவு எகிறியது

■ *மஹேஸ்வரி விஜயனந்தன்*

2023ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான பிரேரணைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீமெந்தின் விலை குறைப்பு

50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து மூடையொன்றின் விலையை நேற்று (04) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் 100 ரூபாயால் குறைப்பதற்கு சீமெந்து உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானித்தன.

சன்ஸ்தா மற்றும் மஹாவலி மரைன் சீமெந்து, டோக்கியோ சுப்பர் மற்றும் நிப்பொன் ஆகிய சீமெந்து வகைகளின் விலைகளே குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 50 கிலோ கிராம் நிறையுடைய இன்சீ சன்ஸ்தா மற்றும் இன்சீ மஹாவலி மரைன் பிளஸ் சீமெந்து மூடையின் விலை 100 ரூபாவால் குறைக்கப்படும் என இந்த சீமெந்து வகைகளை விற்பனை செய்யும் இன்சீ சீமெந்து நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## காஸ் விலை குறையும்

12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 200 முதல் 300 ரூபாயால் குறைக்கப்படும் என்றும் 5 மற்றும் 2.3 கிலோ சிலிண்டர்களின் விலையும் விகிதாரசார அடிப்படையில் குறைக்கப்படும் என்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிவாயு விலை குறைவடைந்துள்ளமை மற்றும் எரிவாயு சூத்திரத்துக்கமைய லிட்ரோ எரிவாயு விலைகள் இன்று புதன்கிழமை (05) குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இலங்கையில்

# வறுமை பரவுவது உரிமை மீறலாகும்

### சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமையானது விண்ணளவை தொட்டுள்ளதுடன், ஏற்பட்டுள்ள உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக மக்களிடையே வறுமை பரவி வருவதும் அவர்களின் மனித உரிமை மீறலாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

'நாம் வீழ்ச்சியின் அருகில் உள்ளோம்' எனும் தொனிப்பொருளில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணிகளை உள்ளடக்கிய 57 பக்கங்களை கொண்ட புதிய அறிக்கையொன்றை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

AMNESTY INTERNATIONAL



## பகலுணவு திட்டத்தை விரிவாக்க அங்கிகாரம்

பாடசாலை பகலுணவு வேலைத்திட்டத்தை விரிவாக்கம் செய்து மேலும் ஒரு மில்லியன் மாணவர்களுக்கு முழுமையான போசாக்கான பகலுணவு வேளையை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

தீபாவளிக்கு முற்பணமாக

## ரூ.15 ஆயிரம் வழங்கவும்

### கேட்டார் சஜித்: பதிலளித்தார் பத்திரண

■ *பா.நிரோஸ்*



தீபாவளி கொண்டாட்டத்துக்காக தோட்டக் கம்பனிகளால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை. ஆகையால், அதனை 15ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்க தேயிலை சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண பாராளுமன்றத்தில் நேற்று (4) தெரிவித்தார். பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்த எதிர்கட்சித்தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கையிலேயே பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண இவ்வாறு தெரிவித்தார். முன்னதாக விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள்

தொடர்ச்சி P2





### சூடு பிடிக்கிறது 15 ஆயிரம் ரூபாய்

■ *எஸ்.கணேசன்*

தீபாவளி பண்டிகைக்கான கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாயை வழங்குமாறு முன்வைக்கப்படும் கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 19 நாள்கள் இருக்கின்ற நிலையிலேயே திடீரென

தொடர்ச்சி P2

## மகேந்திரனுடன் மதியமா? மறுத்தார் ஜனாதிபதி ரணில்

■ *பா.நிரோஸ்*



ஜப்பானுக்கு பயணிக்கும் வழியில் சிங்கப்பூருக்குச் சென்று, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுடன் மதிய உணவை உட்கொண்டதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான எஸ்.எம்.மரிக்கார் முன்வைத்திருந்த குற்றச்சாட்டை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் மறுத்தார்.

தொடர்ச்சி P2



## மன்னார் ஆயரை சந்தித்தார் சாரா

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பீடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். மன்னார் மக்களின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

## நான் இருக்கும் வரை தலையிட மாட்டேன்

■ *மஹேஸ்வரி விஜயனந்தன்*



நான் ஊடக அமைச்சராக இருக்கும் வரை, எந்தவோர் ஊடக அனுமதிப்பத்திரத்தையும் இரத்துச் செய்வதற்குத் தேவையான எந்தவொரு சட்டத்திலும் தலையிடப் போவதில்லை என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஒரு மேம்பட்ட ஊடக கலாசாரத்தை உருவாக்க, ஒரு சர்வதேச அளவிலான ஊடக கலாசாரத்தை உருவாக்க தேவையான மத, சமூக, கலாசார மற்றும் அரசியல் மதிப்புகள் கொண்ட

தொடர்ச்சி P2

## ஏற்றுமதி வருமானம் 10.24 % ஆல் உயர்வு

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியின் வருமானம் 10.24 % என்ற ஆண்டுக்கு ஆண்டு விகித்தில் 1,213.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது என்று இலங்கை சுங்கத் திணைக்கள தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆடை, தேயிலை, இறப்பர் சார்ந்த தயாரிப்புகள், மின்சாரம் மற்றும் மின்னணு பாகங்கள், மசாலா மற்றும் செறிவூட்டப்பட்ட வைரங்கள், இரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், உணவு மற்றும் பானங்கள், கடல் உணவு மற்றும் அலங்கார மீன்கள் போன்ற முக்கிய தயாரிப்புத் துறைகள் ஒகஸ்ட் மாதம் அதிகரித்த ஏற்றுமதியைப் பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராய்ந்து வருகின்றோம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு இலங்கைக்கு உடனடி நிதி உதவிகள் தேவைப்படுகின்றன. தற்போது எமது இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடி, கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராய்ந்து வருகின்றோம் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதியும் தூதுவருமான மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது அமர்வின், 3வது பொதுக்குழு கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தீவு அபிவிருத்தி அதிகார சபையை நிறுவ முஸ்தீபு

நாடெங்கிலும் உள்ள தீவுக் கூட்டத்தை அபிவிருத்தி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தும் நோக்கில், இலங்கை தீவுகள் அபிவிருத்தி அதிகார சபை என்ற புதிய நிறுவனம் நிறுவப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நேற்று (04) தெரிவித்தார்.

குறித்த அதிகார சபையை அமைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஏற்றுமதி வருமானம் 10.24 % ஆல் உயர்வு

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியின் வருமானம் 10.24 % என்ற ஆண்டுக்கு ஆண்டு விகித்தில் 1,213.7 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று இலங்கை சுங்கத் திணைக்கள தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆடை, தேயிலை, இறப்பர் சார்ந்த தயாரிப்புகள், மின்சாரம் மற்றும் மின்னணு பாகங்கள், மசாலா மற்றும் செறிவூட்டப்பட்ட வைரங்கள், இரத்தினக் கற்கள், நகைகள், உணவு மற்றும் பானங்கள், கடல் உணவு மற்றும் அலங்கார மீன்கள் போன்ற முக்கிய தயாரிப்புத் துறைகள் ஒகஸ்ட் மாதம் அதிகரித்த ஏற்றுமதியைப் பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 3 அத்தியாவசிய சேவைகளை பிரகடனப்படுத்தி வர்த்தமானி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கு அமைய மூன்று சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக்கி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின்சார விநியோகம் தொடர்பான சேவைகள், எரிபொருள் உற்பத்தி, விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு, வைத்தியசாலைகள்,

தொடர்ச்சி P2

## பால்மா விலை உயர்கிறது

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பால்மாவின் விலையை இன்று (05) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் அதிகரிப்பதற்கு உள்ளூர் பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, இதன்படி, 400 கிராம் பால்மா பக்கெட்டின் விலை 850 ரூபாயில் இருந்து 950 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2,120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பால்மா பக்கெட்டின் விலை 230 ரூபாய் அதிகரிக்கப்பட்டு, 2,350 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அலைபேசி விலை அதிகரிக்கும்

கடந்த முதலாம் திகதி முதல் அமல்படுதப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி காரணமாக, அனைத்து வகையான அலைபேசிகள் மற்றும் அதுசார்ந்த துணைக் கருவிகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் என்று அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான ஆண்டு வருமானத்தை ஈட்டும் இறக்குமதியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி விதிக்கப்பட்டுள்ளதாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வரி அதிகரிப்பு காரணமாக, பெரிய இறக்குமதியாளர்கள், சில்லறை வியாபாரிகளுக்கு பொருட்களை விற்கும் போது வரியை சேர்த்துள்ளனர் என்றும் அதனால் நுகர்வோருக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வறுமை பரவுவது உரிமை மீறலாகும்

நாட்டின் உணவு பஞ்சம், சுகாதார கட்டமைப்பின் குறைபாடுகள், வருமானம் இழப்பு, போஷாக்கின்மை போன்ற காரணிகளில் முழுமையான ஆய்வொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த வருடத்தில் முட்டையின் விலை 124.1சதவீதத்தினாலும் , பருப்பின் விலை 185.9 சதவீதத்தினாலும், உருளைக்கிழங்கின் விலை 125.3 சதவீதத்தினாலும், சீனியின் விலை 151.1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியை அடிக்கோடிட்டு சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் இந்த ஆண்டில் அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்ட 188 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து மருந்துகளின் விலையை 40 சதவீதத்தினால் உயர்த்தியுள்ளதாகவும், அத்துடன் 2724 அத்தியாவசிய அறுவை சிகிச்சை கருவிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் மக்கள் தொகையில் 28 சதவீதமானவர்கள், (6.2 மில்லியன் பேர்) மிக மோசமான உணவு தட்டுப்பாட்டு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினருக்கு (5.7 மில்லியன் பேருக்கு) மனிதாபிமான உதவிகள் அவசியப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் உயர்வடைந்து செல்லும் சிறுவர் மந்தபோசனம் காரணமாக நீண்டகால தாக்கங்கள் ஏற்படும் எனவும், இந்த ஆண்டின் ஜூன் மாதம் வரையில் கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவர்களில் ஐந்தில் ஒருவர் ஊட்டச்சத்து குறைப்பாட்டில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# ரூ.15 ஆயிரம் வழங்கவும்

சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, பெருந்தோட்டங்களைச் சேர்ந்த மக்கள், தீபாவளியை மத, கலாசாரம் அடங்கிய கொண்டாட்டமாக கொண்டாடி வருகின்றனர் என்றார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, முறையாக கொண்டாட முடியாத அளவுக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆகையால், தீபாவளி முற்பணத்தை அதிகரிக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

தீபாவளி கொண்டாடுவதற்கு தோட்டக்கம்பனிகள், 5 ஆயிரம் ரூபாய் அடிப்படையில் கடந்த காலங்களில் முற்பணம் வழங்கி வந்தன . என்றாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பாரிய பணவீக்கத்துக்கு மத்தியில் தீபாவளி கொண்டாடுவதற்கு 5 ஆயிரம் ரூபாய் எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. எனவே, தோட்டப்புற மக்கள் இம்முறை தீபாவளியை கொண்டாட குறைந்த பட்சம் 15ஆயிரம் ரூபாவாவது பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்பணம் தோட்டக் கம்பனிகளால் கடன் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது. எனவே தேயிலை சபை ஊடாக தலையிட்டு இதனை தோட்டப்புற இந்து மக்களுக்கு பெற்றுக்கொடுக்க விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தலையிட வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கையிலேயே , தோட்டத்தொழிலாளர்களுக்கு இந்த முற்பணத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தி இருக்கின்றோம். அதனால், கடன் அடிப்படையில் இதனை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தேயிலை சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம் என்றார்.

## சூடு பிடிக்கிறது 15 ஆயிரம் ரூபாய்

விழித்துக்கொண்ட மலையக அரசியல்வாதிகளும், ஏன்? எதிர்க்கட்சித் தலைவரும் தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபாவை வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வடிவேல் சுரேஷ் எம்.பி இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் , அதிகரித்து வரும் வாழ்வாதார செலவினை கருத்தில்கொண்டு தீபாவளி முற்பணமாக பெருந்தோட்ட மலையக மக்களுக்கு குறைந்தபட்சம் 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்கிறார்

தொழிலாளர்களின் வரவு தொடர்பாகவோ அல்லது வேறு எதுவித நிபந்தனைகளும் இன்றி அனைவருக்கும் தீபாவளி முற்பணம் வழங்க பெருந்தோட்ட கம்பெனிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தினார்.

பாரத் அருள்சாமி

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாய் வழங்க முதலாளிமார் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாதாந்த ஊதியத்தையும் சம்பள முற்பணத்தையும் நம்பியே தோட்டத் தொழிலாளர்கள் ஒரு மாதத்தைக் கொண்டு நடத்துகின்றனர். அதிலும் கூட ஒருசில தொழிலாளர் குடும்பங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கான செலவுடன் ஒரு மாதத்துக்கு போதுமான வருமானமின்றி, ஒரு நேர உணவை மட்டுமே உண்ணுபவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், தீபாவளிப் பண்டிகைக்காக பெருந்தோட்டங்களில் வழங்கப்படுகின்ற பண்டிகை முற்பணத்தை கருத்திற்கொண்டே தொழிலாளர்கள் தங்களது பண்டிகைக்கான செலவுகளை செய்ய திட்டமிடுவர் ஆகையால், 15 ஆயிரம் ரூபாவை முற்பணமாக வழங்குமாறு கோரிநின்றார்.

# ஏற்றுமதி வருமானம் 10.24 % ஆல் உயர்வு

2022 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் சிறந்த 10 ஏற்றுமதி சந்தைகளில் வலுவான ஏற்றுமதி வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிகப்பெரிய ஏற்றுமதி இலக்கு 2022 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2 பில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளதாகவும் இது 2021ஆம் ஆண்டில் பதிவான1.9 பில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு 21.19% அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் 12.91 % அதிகரித்து, 682.56 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அலைபேசி விலை அதிகரிக்கும்

விற்பனை செய்யும் போது விற்பனையாளர்களும் விலைகளை அதிகரிப்பதாக சங்கம் குறிப்பிட்டது.

2% சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை அரசாங்கம் அறிவித்த போதும் தயாரிப்புகள் நுகர்வோரை சென்றடைகையில் அந்த வரி கிட்டத்தட்ட 5% ஆக இருக்கும் என்றும் அதன் காரணமாக, அலைபேசிகள் மற்றும் அதுசார்ந்த துணைக் கருவிகளின் விலைகள் அதிகரிக்கப்படுவது உறுதி என்று சங்கம் தெரிவித்தது.

நாட்டின் பொருளாதாரம் தற்சமயம் குழப்பமான நிலையில் உள்ளதாகவும் அரசாங்கத்தால் வரிகள் மற்றும் கட்டணங்களை அதிகரிக்க முடியும் என்றும் தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஏற்றுமதி வருமானம் 10.24 % ஆல் உயர்வு

2022 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் சிறந்த 10 ஏற்றுமதி சந்தைகளில் வலுவான ஏற்றுமதி வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிகப்பெரிய ஏற்றுமதி இலக்கு 2022 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2 பில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளதாகவும் இது 2021ஆம் ஆண்டில் பதிவான1.9 பில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு 21.19% அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் 12.91 % அதிகரித்து, 682.56 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# சீமெந்தின் விலை குறைப்பு

நிர்மாணத் தொழில் துறையைக்கு உதவும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நிறுவனம் தெரிவித்தது.

அதேவேளை, டோக்கியோ சுப்பர் மற்றும் நிப்பொன் ஆகிய சீமெந்து வகைகளின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதாக அந்தந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதற்கமைய 3200 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட 50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து மூடையொன்று 3100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அதிகரித்துள்ள சீமெந்து, உருக்கு கம்பி உள்ளிட்ட கட்டுமான பொருட்களின் விலை உயர்வால், அதிகளவான கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், பலர் வேலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2023 ஆண்டுக்கான செலவு எகிறியது

தொடர்ந்து தெரிவித்த அவர், அதனடிப்படையில், அரசாங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான செலவு 7,885 மில்லியன் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியொடுதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் இம்மாதம் (ஒக்டோபர்) நடுப்பகுதியில், சமர்பிக்கவும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான மீண்டெழு செலவினம் 4,634 பில்லியன் ரூபாயாகும். மூலதன செலவினம் 3,245 பில்லியன் ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கான வருமானம் செலவை விடவும் குறைவாகும் 4,429 பில்லியன் ரூபாய் கடனாக எதிர்பார்க்கப்படுகின்றது.

# 3 அத்தியாவசிய சேவைகளை பிரகடனப்படுத்தி வர்த்தமானி

மருந்தகங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் ஆகியவை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவுக்கு அமைய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத குறித்த சேவைகளில் இடையூறு ஏற்படக் கூடும் என்பதைக் கருத்திற் கொண்டே குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராய்ந்து வருகின்றோம்

நெருக்கடி நிலைமையில் இருந்து விடுபடுவதற்கான முயற்சிகளில் முதலீட்டாளர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றோம். கடன் மறுசீரமைப்பு குறித்த இருதரப்பு இணக்கப்பாடுகள் எட்டுவதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் தேசிய ரீதியில் எமது மக்களுக்கான நிலைபேறான வாழ்க்கையை கட்டியெழுப்ப இதுவே சரியான சந்தர்ப்பம் என நாம் கருதுகின்றோம். இதன்போது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பை ஏற்படுத்தவும் வாய்ப்பாக அமைந்துள்ளது. இலங்கையின் இந்த பயணத்தில் சகல விதமான ஒத்துழைப்புகளையும் வழங்கும் சர்வதேச தரப்பினருக்கு இலங்கை தனது நன்றிகளை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது. இலங்கை ஒரு தீவு நாடாக எப்போதுமே எமது இருப்பை பாதுகாக்கும் விதமாக எமது கடல் எல்லையை பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. அதேபோல் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை எப்போதும் கடமைப்பட்டுள்ளது என்றார்.

# நான் இருக்கும் வரை தலையிடமாட்டேன்

ஊடக கலாசாரத்துக்குத் தேவையான சூழலை உருவாக்கி ஒழுங்குபடுத்துவது அவசியமான நடைமுறையாகும்.

எனவே, அரசியல் ரீதியாக பெறுமதிமிக்க ஊடக முறைக்கு தேவையான சூழலை உருவாக்கவும் ஒழுங்குப்படுத்துவதற்குமான தேவையே உள்ளது தவிர, ஊடக நிறுவனங்களை நசுக்கவோ அல்லது ஊடகங்களை நசுக்கவோ எவ்வித சட்டங்களும் தயாரிக்கப்பட மாட்டாது என்றார்.

# காஸ் விலை குறையும்

கடந்த மாதத்துக்கான விலைத்திருத்தம் செப்டெம்பர் 5ஆம் திகதி அறிவிக்கப்பட்டமைக்கு அமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 113 ரூபாயாலும் 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 21 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தன.

புதிய விலைக் குறைப்புக்கு அமைய, 4,664 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 4,551 ரூபாயாக குறைவடைந்தது.

1,872 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,827 ரூபாயாகவும், 869 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 848 ரூபாயாகவும் குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பால்மா விலை உயர்கிறது

இதேவேளை, 840 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஆடை நீக்கப்பட்ட பால்மா பக்கெட் 210 ரூபாயால் உயர்ந்து 1050 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பகலுணவு திட்டத்தை விரிவாக்க அங்கிகாரம்

அரசாங்கம் வருடாந்தம் 4 பில்லியன் ரூபாய்கள் செலவிட்டு 7,926 பாடசாலைகளில் 1.08 மில்லியன் மாணவர்களை இலக்குவைத்து பாடசாலை பகலுணவு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வறுமையொழிப்பு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் ‘உணவுப் பற்றாக்குறையால் எந்தவொரு பிரஜையும் பட்டினியால் இருத்தல் ஆகாது’ எனும் நோக்கத்தை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது.

வறுமை மற்றும் போசாக்கு தொடர்பாக மாவட்ட மட்டத்தில் காணப்படுகின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, தேவையான நிதியை வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் பெற்றுக்கொண்டு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமே இவ்வாறு விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

# மகேந்திரனுடன் மதியமா? மறுத்தார் ஜனாதிபதி ரணில்

பாராளுமன்றத்தில் நேற்று (04) உரையாற்றிக்கொண்டிருந்த மரிக்கார் எம்.பி, தற்போதைய ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியாக இருக்கும்போது மத்திய வங்கியின் கொள்ளையன் என தற்போதைய ஜனாதிபதி ரணிலை விக்கிரமசிங்கவை விமர்சித்தார்கள்.

சிங்கப்பூரிலிருந்து அர்ஜுன மகேந்திரனை அவரே வரவழைத்ததாகவும் தெரிவித்தார்கள். எனினும், ஜப்பானுக்கு செல்லும் வழியில், 6 மணிநேரம் சிங்கப்பூரில் இருந்திருக்கிறார். அப்போது, சிங்கப்பூரின் அமைச்சர் ஒருவரை சந்தித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும், எமக்குக் கிடைத்தத் தகவல்களின் பிரகாரம், அர்ஜுன மகேந்திரனுடனேயே ரணில் விக்கிரமசிங்க மதிய உணவை சிங்கபூரில் உட்கொண்டிருக்கின்றார் என்றார்.

சபையிலிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மரிக்காரின் உரைக்குப் பதிலளித்து உரையாற்றுகையில், சிங்கப்பூரில் அர்ஜுன மகேந்திரன் உடன் மதிய உணவை உட்கொண்டதாக மரிக்கார் கூறுகிறார். சிங்கப்பூரின் அமைச்சருடனேயே காலை உணவை உட்கொண்டேன். மதிய உணவை விமானத்திலே உட்கொண்டிருந்தேன். வேண்டும் என்றால் என்ன உணவை சாப்பிட்டேன் என்பதையும் காண்பிக்கிறேன் என்றார்.

# தீவு அபிவிருத்தி அதிகார சபையை நிறுவ முஸ்தீபு

எமது நாட்டைச் சுற்றி 60 க்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன என்றும் இந்தத் தீவுக் கூட்டத்தை அபிவிருத்தி செய்து சுற்றுலாத் துறையைக் கவர்வதன் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்த முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உலகின் பல நாடுகளில் அமைந்துள்ள தீவுகளின் பொருளாதார வாய்ப்புகள் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் இலங்கையைச் சூழவுள்ள சிறிய தீவுகளின் பொருளாதார வாய்ப்புகள் இதுவரை சரியாக மதிப்பிடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாலைதீவு போன்ற தீவு நாடுகளில் இயங்கும் நீர் பங்களாக்கள் போன்ற ஹோட்டல்களை நிர்மாணிப்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை கவரமுடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

எனவே, அந்தத் தீவுகளின் பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்புகள் முறையான திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய அமைச்சர், ஆனால் எமது நாட்டில் இதுவரையில் அவ்வாறான வேலைத் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றார்.

ஐ.எம்.எப் உடன்

# ஊழியர்மட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து இடவில்லை

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர்மட்ட ஒப்பந்தத்தில், அரசாங்கம் இதுவரையில் கையெழுத்திடவில்லை என பிரதமர் தினேஸ் குணவர்தன சபைக்கு அறிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது, சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை ஏன் இதுவரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை? இந்த ஒப்பந்தத்தின் உள்ள எந்த விடயங்களுக்கு அரசாங்கம் இணங்கியுள்ளது என்பதை நாட்டு மக்களும் பாராளுமன்றமும் தெரிந்துக்கொள்ள வேண்டும் என சுயாதீனப் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, பிரதமர் தினேஸ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், நாணய நிதியத்துடன் இதுவரையில் ஊழியர் மட்ட ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தொடர்பான வரைபே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் சபைக்கு தெரிவித்தார்.



“அங்கஜன் மோசமாக நடந்துக்கொள்கிறார்;

## கோபம் வந்தால் என்ன செய்வேனென தெரியாது”

குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் சபைக்கு தலைமை தாங்கும்போது, மோசமாக நடந்து கொள்வதாக குற்றஞ்சுமத்திய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, அங்கஜனின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (04) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நிலையியல் கட்டளைகளுக்கு புறம்பாக நாம் செயற்பட்டால், எமக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள். ஆனால், நிலையியல் கட்டளைக்கு அமைய நான் செயற்படுகிறேன். இது தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியோது, சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், என்னை சபையிலிருந்து வெளியேற்றிவிடுவேன் என திட்டினார் என்றார்.

எனக்கு அதிகமாகக் கோபம் வரும். அதனால் என்ன செய்வேன் என எனக்கு தெரியாது. ஒருவேளை செங்கோலுக்கு அருகில் நான் வரலாம். அதனால் எனது நற்பெயருக்கே பாதிப்பு ஏற்படும். எனவே, அங்கஜன் இராமநாதனின் செயற்பாடுகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவுறுத்த வேண்டும் எனவும் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

## விலகினார் ஹர்ஷ



கோப் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். கோப் குழுவின் உறுப்பினராக நாம் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை முன்மொழிந்திருந்தோம். எனினும் கோப் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து ஹர்ஷ விலகுகிறார். இதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு கோப் குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத்தை நியமிக்க வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளுக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். இதற்கு சபாநாயகரும் இணங்கியிருந்தார்.

எனினும், தற்போது எதிர்க்கட்சிக்கு கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகள் வழங்கபோவதில்லை என்ற நிலையே காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

வடக்கைப் போல

## தெற்கிலும் தீ வைக்க முயல வேண்டாம்

வடக்கில் தீ வைத்ததைப்போல, தெற்கிலும் தீ வைக்க முயல வேண்டாம் என கூட்டமைப்பு எம்.பி சாணக்கியனிடம் கேட்டுக்கொண்ட சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவல், தெற்கு மாணவர்கள் அமைதியான முறையில் கல்வி கற்பதற்கு இடமளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மாணவர் அடக்குமுறை குறித்து சாணக்கியன் உரையாற்றியிருந்தார். மாணவர்களை தூண்டிவிடுவதுபோல உரையாற்ற வேண்டாம். வடக்கில் தீ வைத்துவிட்டீர்கள். தற்போது தெற்கிலும் தீ வைக்க முயல வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

தெற்கு மாணவர்கள் அமைதியான முறையில் கல்வி கற்பதற்கு இடமளிக்க வேண்டும். மாணவர்களை குழப்பி அவர்களின் எதிர்காலத்தை நாசம் செய்ய வேண்டாம். சாணக்கியன் கல்வி கற்கும் காலங்களில் போராட்டங்களில் ஈடுபட்டதில்லை எனவும் தெரிவித்தார். மாணவர்களின் போராட்டங்கள் என்கிற பெயரில், பயங்கரவாதச் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

தீபாவளிக்கு

## 15 ஆயிரம் ரூபாயை கடனாக வழங்க வேண்டும்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு, பெருந்தோட்ட நிறுவனங்கள் வழங்கும் கடன் தொகையான 5,000 ரூபாய்க்குப் பதிலாக இம்முறை 15 ஆயிரம் ரூபாயை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் பெரும்பான்மையான இந்துகளே இருக்கிறார்கள். இவர்கள் கொண்டாடும் தீபாவளி பண்டிகை இம்மாதம் வருகிறது. கடந்த காலங்களில் தீபாவளியைக் கொண்டாடுவதற்காக பெருந்தோட்ட நிறுவனங்கள் 5 ஆயிரம் ரூபாய் கடன் தொகையை வழங்கும். எனினும் தற்போது அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், தீபாவளிக் கடன் தொகையாக 15 ஆயிரம் ரூபாயை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். தேயிலைச் சபை ஊடாக அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

## சீனாவுடன் செய்துகொள்ளவுள்ள வர்த்தக உடன்படிக்கை என்ன?

**ஜே.வி.பி சபையில் கேள்வி**



சீனாவுடன் செய்துகொள்ளவுள்ள வர்த்தக உடன்படிக்கையில் நாட்டின் பல்வேறு தொழிற்றுறைகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய விடயங்கள் உள்ளனவா என்ற கேள்விகள் எழுவதாகவும், இதனால் அந்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

சில நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கிக்கொண்டு, முதியோர் தினத்தன்று வங்கிகளில் முதியோர்களின் வங்கிக் கணக்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்ட 15 வீத வட்டியை முழுமையாக இல்லாமல் செய்துள்ளனர். கம்பனிகளுக்கு வரிச்சலுகைகளை வழங்கிக்கொண்டு தங்களின் சொந்தப் பணத்தை வங்கிகளில் வைத்திருக்கும் முதியோருக்கு இவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் வங்கிகளின் வட்டி வீதத்தில் மாற்றங்களை மேற்கொண்டமையால் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சிறிய மற்றும் மத்திய தொழில்துறையினருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை இங்கே ஊழல் மோசடிகளை நிறுத்தினாலே முதலீட்டாளர்கள் இங்கு வருவார்கள். அவர்களுக்கு முதலில் மோசடிகள் இல்லாத அரசாங்கமாக இருப்பதே முக்கியமானது என்றார்.

## அரச ஊழியர்களின் சம்பளம் குறையாது



அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைக்கும் வகையில் அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (5) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு இந்த மாதத்தில் ஒருபகுதி சம்பளமே வழங்கப்படும் என சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இது முற்றிலும் தவறானது. தற்போது நாட்டில் 30 இலட்சம் வரையிலான குடும்பங்கள் தங்களுக்கு நிவாரணங்களை எதிர்பார்த்திருக்கின்றன. அதேபோன்று நிலையான சம்பளமொன்றுக்குள் இருக்கும் அரச ஊழியர்களின் குடும்பங்களும் பணவீக்கம் அதிகரிக்கும் போது பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் குறித்த செய்திகளில் கூறுவதை போன்று, அரசாங்கம் எந்தவித தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

93 பில்லியன் ரூபாயை மாதாந்தம் சம்பளத்திற்காக ஒதுக்குகின்றோம். ஓய்வூதியத்திற்காக 21 பில்லியன் ரூபாயை ஒதுக்குகின்றோம். இதனை சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால், எந்தக் கட்டத்திலும் அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்படவில்லை. அரச சேவையை பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது என்றார்.

சமாதானத்தை ஏற்படுத்தும்

## நிலையான திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை



நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் இல்லாத அரசாங்கத்துடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படாதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவித்தார். வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் காணப்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளபோதிலும், அவற்றை மீளத் திறப்பதற்கான எந்தவொரு திட்டங்களையும் கடந்த அரசாங்கமும் இந்த அரசாங்கமும், கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. போதைப்பொருள், வன்முறைச் சம்பவங்கள் வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ளன. யுத்த காலத்தில் கூட தமிழர் பிரதேசத்தில் ஒழுக்கமான இளைஞர் சமூகம் இருந்தது. எனினும் தற்போது பொலிஸார் என பாதுகாப்புத் தரப்பினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளபோதிலும், சமூகத்தை திட்டமிட்டும் அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விவசாயத்தை மேம்படுத்த வேண்டுமென கூறிக்கொண்டு தமிழர்களின் விவசாய நிலங்களை அரசாங்கம் பறிக்கிறது. வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள் கூட ஆக்கிரமிக்கப்படுகின்றன.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு உயர்பதவிகள் வழங்குவது இலங்கைக்கு சர்வதேசத்தில் அவப்பெயரைப் பெற்றுத்தரும் எனவும் கூறினார்.



43 சுயாதீன எம்.பிகளுக்கும் வெட்டு

## சபையில் வெடித்தது சர்ச்சை

அரசாங்கத்திலிருந்து விலகி, எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ள 43 எம்.பிக்களில் பலரும் கோப் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து ஆளுங்கட்சியினருடன் அரசாங்கத்திலிருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால், சபையில் நேற்று (04) காலை கடும் சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி, அரசாங்கத்திலிருந்து ஒரே தடவையில் விலகிய 43 எம்.பிகள், எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளோம். எங்களில் எவருக்கும் கோப் குழுவில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளபோதிலும், என்னை நீக்கியிருக்கிறார்கள்.

அதேபோல், கோப் குழுவில் இதற்கு முன்னர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே, சரித ஹேரத் உள்ளிட்ட அறிவார்ந்தவர்கள் இருந்தார்கள். ஆனால் தற்போது திருடர்களைப் பாதுகாப்போரே குழுவின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

### தயாசிறி முட்டாள்

இதன்போது குறுக்கிட்ட நிமல் லன்ஷா எம்.பி, என்னைவிட சிரேஷ்ட உறுப்பினராகவும் படித்தவராகவும் தயாசிறி இருந்தாலும், அவர் உண்மையில் முட்டாள் என கடுமையாக விமர்சித்தார். இதன்போது ‘முட்டாள்’ என்ற வார்த்தையை நீக்கிக்கொள்ள வேண்டும் என நிமல் லன்ஷாவுக்கு சபாநாயகர் அறிவுறுத்தினார்.

### மூட்டாளை மட்டுமல்ல கூறியவரையும் தூக்குங்கள்

எவ்வாறாயினும் கூட்டமைப்பின் எம்.பி எம்.ஏ சுமந்திரனும் நிமல் லன்ஷாவின் சர்ச்சைக்குரிய பேச்சுக்கு எதிர்ப்பை தெரிவித்ததோடு, ‘முட்டாள்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தியமைக்காக அந்த வார்த்தையை ஹன்சாட்டிலிருந்து மாத்திரம் நீக்காது, இதனை பயன்படுத்திய நிமல் லன்ஷாவைவும் சபையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றார்.

### பசிலின் உதவியாளர்கள்

ஏழு மூளைகளைக் கொண்டவரின் (பசில் ராஜபக்ஷ) உதவியாளர்களே கோப் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்தார். அமெரிக்கவிலிருந்துகொண்டு ஏழு மூளைகளைக் கொண்டவர் கோப் குழுவின் உறுப்பினர்களை நியமிக்கிறார் எனவும் விமல் இதன்போது குற்றஞ்சுமத்தினார்.

குறிப்பாக, ரஞ்சித் பண்டார எம்.பியையே கோப் குழுவின் தலைவராக நியமிப்பதற்கு ஏழு மூளைகளைக் கொண்டவர் ஆலோசனை வழங்கியுள்ளனர். எனவே பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவுக்கு வழங்கப்படும் வாக்குகளைத் தீர்மானிக்கும் வகையிலேயே கோப் குழுவின் உறுப்பினர்களை ஏழு மூளைகளைக் கொண்டவர் தெரிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### நான் கைப்பொம்மையில்லை

இதன்போது குறுக்கீடு செய்த பேராசிரியர் ரஞ்சித் பண்டார, “நான் ஒரு பேராசிரியர்; எனவே எவருக்கும் கைபொம்மையாக செயற்பட மாட்டேன்” எனவும் கூறினார்.

### எவருக்கும் ஏழு மூளைகள் இல்லை

இதேவேளை கோப் குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில் எவரையும் எதிர்க்கட்சி நீக்கவில்லை என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார். ஆளுங்கட்சியினரே இந்தப் பெயர் பட்டியலில் உள்ளவர்களின் பெயர்களை நீக்கியிருக்கிறது. ஏழு மூளைகளைக் கொண்ட எவரும் பாராளுமன்றத்தில் இல்லை எனவும் கேலி செய்தார்.

### மூன்று தலைக் கழுதை

இதேவேளை இப்பிரச்சினையை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்திலோ அல்லது கட்சி தலைவர்கள் கூட்டத்திலோ பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். ஆளுங்கட்சியில் 128 எம்.பிகள் இருக்கிறார்கள். இவர்களில் இருந்தே நாம் கோப் குழு உறுப்பினர்களை ஆளுங்கட்சி சார்பாக நியமித்திருக்கிறோம். சுயாதீனமாக இயங்குவதாகக் கூறி, எதிர்க்கட்சிப் பக்கம் அமர்ந்துள்ளவர்களை எதிர்க்கட்சியினரே கோப் குழுவுக்குப் பரிந்துரைக்க வேண்டும். எனவே இது தொடர்பில் ஆளுங்கட்சி மீது குற்றஞ்சுமத்த முடியாது எனவும் கூறினார். இவ்வாறு தர்க்கம் நீடித்த நிலையில் நேரத்தை சுட்டிக்காட்டி தர்க்கத்துக்கு சபாநாயகர் முற்றுப்புள்ளி வைத்தார்.

# அரசியல் தீர்வை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம்

## குஞ்சுக்குளம் மக்கள், தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் முன்வைத்தனர்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வைக் கோரும் பயணத்தின் 65ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு, நேற்று செவ்வாய்க்கிழமை (04) காலை 11 மணியளவில், மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன், குஞ்சுக்குளம், பெரிய முறப்பு ஆகிய கிராமங்களை சேர்ந்த கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, குஞ்சுக்குளம் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளையும் கிராமமக்கள் முன் வைத்தனர்.




இளைஞர்கள், பொது மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பெண்கள் இணைந்து, "எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப்பொருளில், வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் 100 நாள்கள் நடைபெற உள்ள செயற்றிட்டத்தின் 65ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மடு, குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது. குறித்த போராட்டம், வடக்கு- கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாள்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேய்ச்சல் நிலம் இல்லாததால்

# பால் உற்பத்தியாளர்கள் பெரும் அசௌகரியம்

## கிழக்கு மாகாணத்தை ஆளுநர் நாசப்படுத்திவிட்டார் என்கிறார் சாணக்கியன்

■ வ. சக்தி

கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணத்தை நாசப்படுத்தி உள்ளார். இவரது செயற்பாடுகள், கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி தொழிற்றுறையை முழுமையாக பாதிக்கச் செய்துள்ளது. ஆகவே, இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், விவசாயத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இவ்வாறு கோரிக்கைவிடுத்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருசில பகுதிகள் மேய்ச்சல் நிலங்கள் என இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை.



'வியத்மக' அமைப்பின் உறுப்பினரான கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணத்தை முழுமையாக நாசப்படுத்தி உள்ளார். இந்த மேய்ச்சல் நிலப் பிரச்சினை தொடர்பில், கிழக்கு மாகாண ஆளுநர் முறையாகச் செயற்படவில்லை.

நாட்டில் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், பால் உற்பத்தி தொழிற்றுறையும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. பால் உற்பத்தியாளர்கள் மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மயிலடுத்துறை பகுதியில் அத்துமீறிய வகையில் ஒரு தரப்பினர் கூடாரமிட்டுள்ளார்கள். இச்செயற்பாடுகளுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தோம். இவர்களை மீண்டும் அழைத்து வருவதில்லை என பொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டதன் பின்னரே, வழக்கை மீளப் பெற்றோம். தற்போது மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும்.

சேதன பசளை உற்பத்தி என ஒதுக்கப்பட்ட ஐந்து ஏக்கர் நிலப்பரப்பு, அரசியல் தரப்பினரின் இணக்கமானவர்களுக்கு வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மன்னாருக்கு விஜயம்



■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னாருக்கு வருகை தந்திருந்த இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சரா ஹூல்ரன் நேற்றுமுன்தினம் (03) மாலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்து, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ. ஸ்ரான்லி டிமேலுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலின் போது, மன்னார் மாவட்ட நிலைவரம் தொடர்பாக அரசாங்க அதிபரால் விளக்கமளிக்கப்பட்டதுடன், அரசாங்கத்தால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள், மாவட்ட மக்களுக்கு தேவைப்பாடாக உள்ள விடயங்கள், நிலையான வாழ்வாதார வழிவகைகள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடி உள்ளதுடன், உயர்ஸ்தானிகரைக் கௌரவிக்கும் முகமாக, அரசாங்க அதிபரால் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் மூவரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எட்டு இந்திய மீனவர்கள் விடுதலை



■ செந்தூரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடித்த குற்றச்சாட்டில் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி காரைநகர் கடற்பிரப்புக்குள் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் எட்டு பேரையும் நேற்று (04) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் படகை அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்ட ஊர்காவற்றுறை நீதவான் ஜெ. கஜநிதிபாலன், மீனவர்களுக்கு ஆறு மாதங்கள் சிறை தண்டனை விதித்து, ஐந்து வருடங்கள் ஒத்திவைத்து தீர்ப்பளித்தார்.

# சட்டவிரோத பொருட்களுடன் ஒருவர் கைது

■ க. அகரன்

வவுனியா, ஈரட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் பொருட்களை கொண்டு சென்ற குற்றச்சாட்டில், நேற்றுமுன்தினம் (03) ஈரற்பெரியகுளம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வத்தளைக்கு பயணம் செய்த கூலர் ரக ஹென்டர் வாகனத்தை நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணியளவில் ஈரட்டை பகுதியில் வழிமறித்து சோதனை மேற்கொண்ட பொலிஸார், குறித்த வாகனத்தில் இருந்து



3,800 கிலோ மஞ்சள், 250 மில்லி லீற்றர் விவசாய கிருமிநாசினி மருந்து போத்தல் 519 என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சட்டவிரோத பொருட்களைக் கொண்டு சென்ற நீர்கொழும்பை சேர்ந்த 43 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீச்சல் பயிற்சி இலவச முகாம்

■ எம்.எம் அஹமட் அனாம்

இளைஞர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம் வாகரை, காயாங்கேணி கடற்கரையில் கல்குடா டைவர்ஸ் அணியின் ஏற்பாட்டில் 'ஸ்ரீ லங்கா லைப் சேவிங் லைப் காட்' அமைப்பின் வழிகாட்டலுடன் ஞாயிற்றுக்கிழமை (02) முழு நாளும் நடைபெற்றது.

'ஸ்ரீ லங்கா லைப் சேவிங் லைப் காட்' அமைப்பின் அங்கத்தவர்களான கல்குடா டைவர்ஸ் அணியின் விசேட சுழியோடிகளான அப்துல் மஜீத் ஹலீம், ஹபீப் முஹம்மட் இப்றாஹீம், நாஸர் முஹம்மட் றினாஸ், அப்துல் மஜீட் மபாஸ் ஆகியோர் கலந்து கொண்டு, இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சியின் முக்கியத்துவம், அதனால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக விளக்கியதுடன் கடலில் நீச்சல் பயிற்சியையும் வழங்கினர்.

எதிர்வரும் காலங்களில் இன்னும் சிறப்பான முறையில் அதிகமான இளைஞர்களுக்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளதாகவும் இதில் நீச்சல் பழகுவதற்கு ஆர்வமுள்ளவர்கள் பயிற்றுவிப்பாளரான அப்துல் மஜீத் ஹலீம் என்பவரின் 0777176652 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.





பூர்வீக காணிகள், குளம்;

# ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாப்பதற்கான கலந்துரையாடல்

■ நூருல் ஹுதா உமர்

இறக்காமம் பிரதேசத்தில் உள்ள பூர்வீக நிலங்கள் மற்றும் குளத்தின் கரையோரப் பகுதிகள், நீண்ட காலமாக மிக நுணுக்கமான முறையில், பல தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவது தொடர்பில், சமூக பிரதிநிதிகளை தெளிவூட்டல் அமர்வும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல், இறக்காமம் 1-9 நன்னீர் மீனவ சங்கத்தின் தலைவர் என். நிஸ்வி தலைமையில் இறக்காமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வாறு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாக, அரசியல்வாதிகளிடமும் அரச நிர்வாகத்தினரிடமும் முறைப்பாடுகள் பல்வேறு தடவைகள் செய்யப்பட்டும், ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சமூக பிரதிநிதிகளை தெளிவூட்டும் மேற்படி கூட்டத்துக்கு இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ் ஜமீல் காரியப்பர், உதவி தவிசாளர் மௌலவி ஏ.எல் நௌபர், முன்னாள் தவிசாளர் ஜே.கே ரஹ்மான், பிரதேச சபை உறுப்பினர் எம்.எல் முஸ்மி ஆகியோருடன் இணைந்து இறக்காமம் பிரதான பள்ளிவாசல் தலைவர்கள், பிரதேச ஜம்மியதுல் உலமா சபையினர், கால்நடை பண்ணையாளர் சங்க உறுப்பினர்கள், நன்னீர் மீனவ சங்க உறுப்பினர்கள், இளைஞர் கழக சம்மேளனம், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இறக்காமம் பிரதேசத்தில் உள்ள பூர்வீக நிலங்கள், பாரம்பரிய வரலாற்று தொன்மை வாய்ந்த குளத்தின் கரையோரங்கள் ஆக்கிரமிப்புக்கு எதிராக, ஒன்றினைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகள் இக்கூட்டத்தின் பின்னர் முடிக்கிடவிடப்பட்டுள்ளது.

இறக்காமம் நன்னீர் மீனவ சங்கமும் இறக்கமாம் கால்நடை பண்ணையாளர் சங்கமும் விவசாயக் குழு என்பன இணைந்து, மேற்படி ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக, அம்பாறை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலிருந்து

# மீளக்குடியமர்ந்தோர் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் தகவல் திரட்டல்களின் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (03) மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் 'சூம்' செயலி ஊடாக இடம்பெற்றது.

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விடயங்களில் அதிக கவனம் செலுத்தி, மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில், மீளக் குடியமர்ந்தோர் தொடர்பான சட்டபூர்வமான பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்காக, மாவட்ட மட்டத்தில் தீர்க்க முடியாத பிரச்சினைகளை, கொழும்பு மட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்காகவே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்தோர் தொடர்பாகத் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், குடியுரிமை, தேசிய அடையாள அட்டை, பாடசாலைகளில் இணைத்தல், காணி, சட்ட ரீதியான பிரச்சினைகள், பட்டம், வாழ்வாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை, 405 குடும்பங்களைச் சேர்ந்த 878 பேர் மீளக் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலிஸ் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.கி வில்வராஜா, பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், விடயதான உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் போதைப் பொருட்களுடன் கைது; பொருட்களும் மீட்பு:

# அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

■ எம். எஸ். எம் நூர்தீன், கனகராசா சரவணன்

புதிய காத்தாங்குடி நெசவுநிலைய வீதியில், நேற்றுமுன்தினம் (02) மாலை வீடொன்று உடைக்கப்பட்டு, திருடப்பட்ட ஒன்றரைப் பவுண் நகைகளையும் 3,500 ரூபாய் பணத்தையும் காத்தான்குடி பொலிஸார் மீட்டுள்ளதுடன், திருடிய சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

திருடிய தங்க நகைகளை, விற்க முற்பட்ட போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடிய தங்க நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளன. அதன்போது, சந்தேக நபரை சோதனை செய்கையில், அவரிடம் இருந்து, 80 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயன சிறியின் ஆலோசனையில், குற்ற தடுப்பு பொறுப்பு அதிகாரி ஏ.எம். எஸ் ரஹீம் தலைமையில் ஜெயசிங்க, சாணக்க, எஸ் தனோஜன், கருணாரெட்ன ஆகிய பொலிஸாரின் துரித நடவடிக்கையால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

### வாழைச்சேனையில்...

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நான்கு வீடுகளை உடைத்து அங்கிருந்து 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்ற 23 வயதுடைய இளைஞனை ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் (03) கைது செய்துள்ளதாகவும் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர், நாவலடியில் வீட்டை உடைத்து ரைஸ்குக்கரையும் தங்க ஆபரணத்தையும் பிறைந்து றைச்சேனையில் தொலைக்காட்சி, ரைஸ்குக்கர், 20 ஆயிரம் ரூபாயையும் செம்மண்ஓடையில் காஸ்சிலிண்டர், மணிக்கூடு, 20 ஆயிரம் ரூபாயையும் நாவலடியில் அப்பிள் போன், சம்சோங் போன், 70 ஆயிரம் ரூபாய் என்பன திருட்டுப் போயிருந்த நிலையில், நாவலடியைச் சேர்ந்த 23 வயது இளைஞன், ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

“வீட்டு உரிமைப்பத்திரங்களை வழங்காமல்

# ஏமாற்றுகின்றனர்”

## கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் தெரிவிப்பு

மஹேஸ்வரி விஜயனந்தன்

மலையக மக்களின் வீடுகளுக்கான உறுதிப்பத்திரங்களை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தி, மலையக தோட்டத் தொழிலாளர்கள் வீதிக்கு இறங்கியதாக, கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பெ.முத்துலிங்கம் தெரிவித்தார்.

ஒக்டோபர் 3ஆம் திகதி உலக வாழ்விட தினமாகும். அன்றைய தினத்திலாவது எமது கோரிக்கை, ஆட்சியாளர்களின் காதுகளுக்கு கேட்கவேண்டும். அதனை கருத்திக்கொண்டே இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தோம் என்றார்.




கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (03) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 200 வருடங்களுக்கும் மேலாக, மலையக மக்கள் இன்னமும் லயன் வீட்டு தொகுதிகளில் நான்கு, ஐந்து தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றார்கள். 1987ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் 37,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்றன. அப்போதைய அரசாங்கங்களால் கடன் அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு, கடனை செலுத்தி முடித்திருந்தாலும் அந்த வீடுகளுக்கான உறுதிப்பத்திரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

எனினும், கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் சில தற்காலிக உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை நாட்டின் சட்டத்தின் பிரகாரம், இலங்கை அளவையாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் அதனால் எந்தப் பயனும் இல்லை.

நாட்டின் அபிவிருத்திக்காகவும், அந்நிய செலவாணிக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் இந்த மக்கள், முறையான வீட்டுத்திட்டங்கள், அல்லது காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

எனவே, இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் மூலமாக, அழுத்தம் கொடுப்பதற்காகவே இன்று வீதிகளில் இறங்கி உள்ளதாகத் தெரிவித்த அவர், ஆர்ப்பாட்டத்தின் மூலம் எமக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எமது இலக்கு என்றார்.



மாஓயாவில் வசிக்கும் முதலை தொடர்பில்

## பிரதேசவாசிகளுக்கு அறிவுறுத்தல்

என்.ஆராச்சி

ரம்புக்கனை, பின்னவல பிரதேசத்தின் மாஓயாவில் சுமார் ஒரு மாதகாலமாக முதலையொன்று உலாவுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் குறித்த ஆற்றை தேவைகளுக்குப் பயன்படுத்தும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் கேகாலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள புளத்கொஹூபிட்டிய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி இமேஸ் குணரத்ன, இதற்கு முன்னர் குறித்த முதலை இந்த ஆற்றில் இருப்பதாக தகவல்கள் கிடைத்த போது, மக்களைத் தெளிவுப்படுத்தினோம். தற்போது மீண்டும் முதலை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதையடுத்து, அங்கு சென்றாலும் முதலையை எம்மால் அவதானிக்க முடியவில்லை.

எனினும், பிரதான அலுவலகத்திலிருந்து கிடைக்கும் ஆலோசனைக்கு அமைய, முதலை அங்கிருந்தால் அதனை வேறோர் இடத்துக்கு கொண்டு செல்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மலையகத்திலுள்ள நீர்த்தேக்கங்களின்

## நீர்மட்டம் அதிகரிப்பு



எஸ்.கணேசன், எம். கிருஸ்ணா

நீரேந்தும் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக, நோட்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்தேக்கத்தில் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளமையால் குறித்த நீர் தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நீர்த்தேக்கத்துக்கு அண்மையில் வசிப்பவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மலையகத்தில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

மவுஸ்ஸாக்கலை, லக்ஷபான, கெனியன், கொத்மலை, மேல் கொத்மலை, நவ லக்ஷபான ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடதக்கது.

காசல்ரீ நீர்தேக்கத்துடன் இணையும் ஹட்டன் ஓயா, கெசல்கமுவ ஓயா ஆகியன பெறுக்கெடுத்து உள்ளமையால் நேற்று (04) அதிகாலை தொடக்கம் நீர் நிரம்பி வழிகின்றது.

நீர்தேக்கத்தில் நீர் நிரம்பி வழிவதால, காசலரீ ஓயா கரையோரப்பகுதிகளில் வசிக்கும் ஒஸ்போன், தண்டுகளா, நோட்டன் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.



## கஞ்சா செடிகளை வளர்த்தவர் கைது

நடராஜா மலர்வேந்தன்

பண்டாரவளை, எல்ல பகுதியில் வீடொன்றின் மேல் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகள் விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவத்தில் 41 வயதுடைய நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்பதோடு, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சந்திப்பு



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் மலேசியா உயர்ஸ்தானிகர் டடோ டான் யாங் தாய்க்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்க்களை புதிதாக மலேசியா அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட quata system மூலம் உள்வாங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நுட்பமான போராட்டத்தை முன்னெடுத்து

## இ.தொ.கா வெற்றி கண்டுள்ளது



பி.கேதீஸ்

தொழிலாளர்களை வீதிக்கு இறக்காமல், கோஷங்கள் எழுப்பி போராட்டங்கள் செய்யாமல், தோட்ட நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நுட்பமானதொரு முறையில் போராட்டத்தினை முன்னெடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அதில் வெற்றி கண்டது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பாக வெற்றி கிடைத்த போதிலும், மஸ்கெலியா கம்பனி நிர்வாகத்தின் கீழுள்ள பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வேதனம் தொடர்பான பிரச்சினைகள் இருந்தன.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நுட்பமான வழிகளில் காய்களை நகர்த்தியது.

அதன்படி, குறித்த கம்பனி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, கொழும்பு கொண்டு செல்ல தயார் நிலையிலிருந்த தேயிலைத்தூள் பெட்டிகளை அத்தோட்டங்களிலிருந்து கொண்டு செல்லும் பணிகளை நிறுத்தி வைக்கும் செயற்பாடுகளில் தொழிலாளர்கள் அமைதியாக ஈடுப்பட்டனர்.

தொழிலாளர்கள் இவ்விடயத்தில் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோரால் தோட்டக் கமிட்டி தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தேயிலைத்தூளை விற்பனைக்கு கொண்டு செல்ல முடியாமல் தடுமாறிய கம்பனியானது இறுதியில் இ.தொ.காவுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்கியது.

இறுதியில் நாம் முன்வைத்த தொழிலாளர்களின் 16 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எமக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை எமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும் என்றார்.

சுற்றுலா தினத்தையொட்டி

## கேகாலையில் விசேட கலந்துரையாடல்

என்.ஆராச்சி

இந்த வருடத்துக்கான உலக சுற்றுலா தினம் 27ஆம் திகதி ‘Re thinking Tourism’ என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படுவதற்கு அமைவாக, கேகாலை மாவட்டத்திலுள்ள சுற்றுலா வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள், அரச நிறுவனங்களுக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் ரம்புக்கனையில் நடைபெற்றது.

இதன்போது சுற்றுலா ஹோட்டல் துறையினர் தற்போது எதிர்நோக்கியுள்ள நிதி, சட்டரீதியான பிரச்சினைகள், சுற்றுலா வர்த்தகத்துறையினர் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. அதுமட்டுமின்றி, கேகாலை மாவட்டத்திலுள்ள சுற்றலாத்தளங்களை விருத்தி செய்யவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறையை மய்யபடுத்தி சப்ரகமுவ மாகாணத்துக்குள் பல விசேட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், கேகாலை மாவட்ட செயாலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## வீட்டை உடைத்து நுழைந்தவர் கைது

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன், பன்மூர் பிரதேசத்திலுள்ள வீடொன்றை உடைத்து அங்கிருந்த தொலைக்காட்சி பெட்டி, உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பில், நபரொவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

> திருடப்பட்ட பொருட்கள், வேறு ஒரு நபருக்கு விற்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றுள்ளதுடன், அன்றைய தினமே சந்தேகநபர் ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரால் திருடப்பட்ட தொலைக்காட்சி உள்ளிட்ட சில பொருட்கள், வேறு ஒரு நபருக்கு விற்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



## புத்தகங்கள் அன்பளிப்பு

காமராஜரின் 47ஆவது நினைவு தினைத்தை முன்னிட்டு, இலங்கை நாடார் நலன்புரி சங்கத்தினூடாக தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. பாடசாலையின் ஆசிரியை தேவரஞ்சனி ஊடாக இந்தப் புத்தகங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (பி.கேதீஸ்)





## பரிசளிப்பு விழா

லிந்துலை, சென் கூம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் என். தங்கராஜ் தலைமையில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது. இதில், பிரதமஅதிதியாக நுவரெலியா வலய கல்விப்பணிப்பாளர் லசந்த அபேரத்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(எஸ்.கே குமார்)





## வாணி விழா

ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரியின் வாணி விழா நிகழ்வுகள், பாடசாலையின் அதிபர் தலைமையில், நேற்று (04) நடைபெற்றன.

(எம். செல்வராஜா)





## நினைவு தின வைபவம்

மலையக கலை கலாசார சங்கம் (ரத்னதீபம் அமைப்பு), கண்டி, கெப்பட்டிபொல நினைவு மண்டபத்தில், சிறுகதை எழுத்தாளரும், நூலாசியருமான காலம் சென்ற உடதலவின்ன புன்யாமீன் நினைவு தின வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது திருமதி மஸீதா புன்யாமீனை கௌரவித்து, சட்டத்தரணி ஏ.எம். வைஸ் பரிசு வழங்குவதையும் இலங்கையின் பல்வேறு மதங்கள் மற்றும் இன நல்லுறவுக்கான சகவாழ்வு மையத்தால் கண்டி மாவட்ட சமாதானத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சில்மியா சஹறாப்தீனுக்கு, புன்யாமீன் நினைவுப் பதக்கத்தை கலாநிதி துரை மனோகரன் வழங்கினார். (மொஹமட் ஆஸிக்)





## சிறுவர் தினம்

வலப்பனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை, எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் ‘சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததோர் எதிர்காலம்’ எனும் தொனிப்பொருளில் அமைந்த சிறுவர் தின நிகழ்வு, அகரம் அறிவின் அரங்கம் அமைப்பின் பங்கேற்புடன் பாடசாலை அதிபர் ப. முகுந்கமலவண்ணன் தலைமையில் நடைபெற்றது. (ஆ. ரமேஸ்)

# மலையக தலைமைகளே ‘காக்கா முட்டை’ விளையாடாதீர்கள்!

மக்கள் நலன்சார்ந்த சிந்தனை இல்லாத எந்தத் தலைவர்களும் வெகு சீக்கிரத்தில் தூக்கியெறிப்படுவார்கள் என்பதை அரசியல் தலைமைகள் ஒவ்வொரு நொடியும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களால் தூக்கியெறிப்பட்ட அரசியல் தலைவர்கள் பலருலர். கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே பதவியில் இருந்து விலகுவதற்கான கடும் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்த அரச தலைவராக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உதாரண புருஷராகத திகழ்கின்றார்.

மலையகத்தை பொறுத்தவரையில், அரசியல் தலைவர்களின் கடந்தகால, நிகழ்கால செயற்பாடுகளில் ஒரு சிலவற்றை பார்க்குமிடத்து, மக்கள் சார்பானதாக இருக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும். ஆக, மக்கள் நலன்சார் விடயங்களில் ஆகக் கூடுதலான அக்கறையை காட்டவில்லை; வெறுமனே படத்துக்காக முகங்களை காட்டுவதாகவே அமைகின்றது. இல்லையேல் கடந்தகால வேலைத்திட்டங்களில் குறைகளை கண்டுப்பிடித்து அரசியல் விமர்சகர்களாக நிற்கின்றனர்.

அரசியல், பல தடங்களைக் கொண்டிருக்கின்றது. அதில், ‘மக்களுக்கான அரசியல்’ முக்கியம். அமைச்சரவையில் கூட, கருத்துகளை செவிசாய்க்காதவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய என்பதை, கூட்டுப்பொறுப்பையும் மீறி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே விமர்சித்தனர். ஆக, குரல்களுக்கு செவிசாய்க்க வேண்டியது அரசியல்வாதிகளின் தார்மீக கடப்பாடாகும்.

மலையகத்தின் வீட்டுப்பிரச்சினைக்கு இன்னுமே நிரந்தரமான தீர்வு வழங்கப்படவில்லை. 1987ஆம் ஆண்டு முதல், மலையகத்தில் நிர்மாணிக்கப்பட்ட 37 ஆயிரம் வீடுகளுக்கு சட்டரீதியான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கக் கோரி, மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் கொழும்பில் நேற்று முன்தினம் (03) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதனிடையே, மலையகத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஆக, கட்டணங்கள் செலுத்தப்பட்ட வீடுகளுக்கும், பூரணப்படுத்தப்படாத வீடுகளுக்கும் எவ்விதமான உறுதிப்பத்திரங்களும் இல்லை. இதற்கிடையில் இயற்கை அனர்த்தங்கள் இன்னும் சில வீடுகளை இடித்தழித்து, அம்மக்களை நிர்க்கதிக்குள் தள்ள முயல்கிறது.

மலையக அரசியல் வாதிகளைப் பொறுத்தவரையில், கூட்டணி அமைத்து, சந்தர்ப்பவாத கூட்டாளிகளாக மட்டுமே செயற்படுகின்றனர். அவ்வாறானவர்களுக்கு தக்க பாடங்களை மக்கள் கற்றுக்கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அதற்கான குழிகளை பறித்துக்கொள்ளவேண்டாம்.

பெருந்தோட்டங்களைச் சார்ந்த சிறுவர்கள், விடுமுறை நாள்களிலும், பாடசாலைகள் விட்டு வந்ததன் பின்னரும் சிரட்டைகளில் மண்ணை நிரப்பி ‘காக்கா முட்டை’ விளையாடுவார்கள். அதில், தன்னுடையது அழகாக இருக்கவில்லை என்றால், ஏனைய ‘காக்கா முட்டை’களை கால்களால் எட்டி உதைத்து, அழித்துவிட்டு, அழிச்சாட்டாம் ஆடிவிடுவார்.

இதேபோன்ற ‘காக்கா முட்டை’ அரசியலை கைவிட்டு, மக்கள் நலன்சார் செயற்றிட்டங்களை காத்திரமாக முன்னெடுக்குமாறு மலையக அரசியல்வாதிகளிடம் வலியுறுத்துகின்றோம்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அடக்குமுறை பயனளிக்குமா?



எம்.எஸ்.எம் ஐயூப்

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போது, அரசாங்கம் அந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதை விட, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களின் குரலை அடக்குவதிலேயே, கூடுதல் கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

ஜனநாயகத்தைப் பற்றி பெரிதாகப் பேசி, அதனாலேயே மேற்குலக அரசியல் தலைவர்களின் மதிப்பைப் பெற்றிருந்த ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்று இருக்கும் காலத்திலேயே, இந்நிலைமை ஏற்பட்டு இருப்பது கவனத்தில் கொள்ளக்கூடிய விடயமாகும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு, மக்கள் வெறிகொண்டு இலட்சக் கணக்கில் வீதியில் இறங்கி பேராட்டம் நடத்தியதன் விளைவாகவே, பாராளுமன்றத்தில் வெறும் தேசிய பட்டியல் ஆசனம் ஒன்றை மட்டும் வைத்திருந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த மே மாதம் பிரதமராகப் பதவி ஏற்க முடிந்தது. அவ்வாறு பதவி ஏற்றவுடன் அவர், அந்தப் போராட்டக்காரர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதாக அறிவித்தார்.

அதற்காக அவர், தமது கட்சியின் பிரதித் தலைவரான ருவன் விஜேவர்தனவுக்கும் தமது கட்சியின் தலைவர்களின் ஒருவரான கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்கவுக்கும் ஆலோசனைகளையும் வழங்கினார். ஆனால், இரண்டு மாதங்களுக்குப் பின்னர், அதே போராட்டத்தின் விளைவாக, ஜனாதிபதி பதவியை ஏற்ற ரணில், அந்தப் போராட்டக்காரர்களுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவி ஏற்ற உடனே, போராட்டக்காரர்களை வேட்டையாட ஆரம்பித்தார். பொருளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டம், எந்தவொரு கட்சியினதும் வழிநடத்தலின்றி, சுயமாக களத்தில் இறங்கிய பொதுமக்களாலும் பல்வேறு குழுக்களாலுமே மேற்கொள்ளப்பட்டது. அதன்போது சில போராட்டக்காரர்கள் களத்தில் முன்னணியில் இருந்து செயலாற்றினர். அவர்களிலும் மிக முக்கியமானவர்களுக்கு எதிராக, அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவித்து வருகிறது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே உள்ளிட்ட சிலருக்கு எதிராகவே அச்சட்டம் பாவிக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால், தற்போது அமலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு பொருந்துவதாக இல்லை என்பதாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆலோசனையை ஏற்று, இந்தச் சட்டத்தை திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையிலேயே அதே சட்டம், போராட்டக் களத்தில் முன்னணி வகித்தவர்களுக்கு எதிராக உபயோகிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த கடந்த அரசாங்கத்தின் காலத்திலேயே, அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்த முன்வந்தது. அதற்காக அந்த அரசாங்கம், ஒரு சட்ட வரைவையும் தயாரித்தது.

பின்னர், “வெளிநாட்டவர்களின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட சட்டம்” எனக் கூறி, கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம், 2020ஆம் ஆண்டு அந்தச் சட்ட வரைவைத் தூக்கி எறிந்தது. பின்னர், மனித உரிமைகள் பேரவையின் நெருக்குதலின் காரணமாக, கோட்டாவின் அரசாங்கமும் மற்றொரு வரைவை தயாரித்தது.

அதாவது, தற்போது அமலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம், சர்வதேச தரத்தில் இல்லை என்பதை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஏற்றுக் கொண்டது. இந்தநிலையில் தான், அரசாங்கம் இன்னமும் அதனை சிலருக்கு எதிராகப் பாவிக்கின்றது.

இவ்வாறு இருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி, கொழும்பில் சில இடங்களை உயர்பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி, வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். இதன் நோக்கம், கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை தடுப்பதே ஆகும். அந்த வர்த்தமானியின் பிரகாரம், அதில் குறிப்பிடப்பட்ட இடங்களில் கூட்டங்களை அல்லது ஆர்ப்பாட்டங்களை நடத்துவதாயின், பொலிஸாரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். பொலிஸார் வழமைப் போல் அனுமதி வழங்குவதாயின், இந்த வர்த்தமானி அவசியமே இல்லை. அவர்கள் அனுமதி வழங்க மாட்டார்கள் என்பதே, இதன் மூலம் தெரிகிறது.

இதற்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில அமைப்புகளாலும் நபர்களாலும் அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அரச படையினருக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான போர் நடைபெற்ற காலத்தைப்போல் படைமுகாம்களோ அல்லது அரச தலைவர்களினதும் படைத் தளபதிகளினதும் வீடுகள் தாக்கப்படும் அபாயம் இல்லாத நிலையில், பாதுகாப்பு வலயங்கள் எதற்காக என்பதே எதிர்க்கட்சிகளின் கோள்வியாகும்.

சாத்வீகமான முறையில், அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதையும் ஆர்ப்பாட்டம் நடத்துவதையும் சட்டவிரோதமான செயல்களாக அரசியலமைப்பு கருதவில்லை.

அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்ட கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரத்துக்கு இந்த வர்த்தமானி தடையாக அமைவதால், உயர்நீதிமன்றம் பெரும்பாலும் நிராகரிக்கும் சாத்தியம் இருந்த நிலையில், ஜனாதிபதி ஒக்டோபர் முதலாம் திகதி அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தார். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவிப்பதற்கு எதிராக, சர்வதேச ரீதியில் கண்டனங்கள் எழுந்ததைப் போலவே, இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கும் கண்டனங்கள் எழுந்தன. இப்போது அரசாங்கம், மற்றோர் அடக்குமுறைச் சட்டத்தையும் கொண்டுவர முயல்கிறது. மறுவாழ்வளிக்கும் போர்வையில், சிலரை தடுத்து வைப்பதே அதன் நோக்கமாகத் தெரிகிறது.

‘மறுவாழ்வுச் செயலணிச் சட்டம்’ (Bureau of Rehabilitation) என்று புதிய சட்டம் அழைக்கப்படுகிறது. தவறாக வழிநடத்தப்பட்ட போராளிகள், நாசகார செயல்களில் ஈடுபட்ட நபர்கள், போதைப் பொருட்களுக்கு அடிமையானோர் ஆகியோருக்கு மறுவாழ்வளிப்பதே அதன் நோக்கம் என அதன் அறிமுக வாசகங்கள் மூலம் கூறப்படுகிறது.

போதைப் பொருட்கள் மீது தங்கியிருப்போர், முன்னாள் போராளிகள், வன்முறையைக் கையாளும் தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அவசியமாகும். ‘ஏனைய குழுக்களின்’ உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இதன் நோக்கம் என அதில் மற்றோர் இடத்தில் குறிப்பிடப்படுகிறது. இந்த ‘ஏனைய குழுக்கள்’ எவை என அதில் கூறப்படவில்லை.

அதேவேளை, ஒருவர் தொடர்பாக மறுவாழ்வு அவசியமா என்பதைத் தீர்மானிப்பது யார் என்பதும் அதில் குறிப்பிடப்படவில்லை. தீவிரவாத அல்லது நாசகார செயல்கள் என்றால் என்ன என்பதும் விவரிக்கப்படவில்லை. இதுவும் அரச எதிர்ப்பு போராட்டங்களை அடக்கும் நோக்குடனான சட்டம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவை அனைத்தும், மக்கள் ஏன் ஆரப்பாட்டம் நடத்துகிறார்கள் என்பதை ஆராயாமல் ஆரப்பாட்டங்களை அடக்க எடுக்கும் முயற்சிகளாகும். வடக்கு, கிழக்கில் ஆயுதப் போரோ அல்லது தென்பகுதி போராட்டங்களோ, மனநோயாளர்களால் நடத்தப்பட்டவையல்ல. அவற்றுக்கு காரணங்கள் இருந்தன; இருக்கினறன. அவற்றைத் தீர்க்காமல், அடக்குமுறையின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

ஒரு காலத்தில், கடும் அடக்குமுறை ஆட்சியை, ஐக்கிய தேசிய கட்சி நடத்தி வந்தது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் 2000ஆம் ஆண்டு முதல் அது ஓரளவுக்கு ஜனநாயகத்தை மதிக்கும் கட்சியாக மாறியது. ஜனாதிபதி சந்திரிகா, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நோர்வேயின் மத்தியஸ்தத்தை நாடிய போது, ரணில் இனவாதத்தை தூண்டாமல், பேச்சுவார்த்தையை ஆதரித்தார்.

2001ஆம் ஆண்டு பிரதமராக பதவி ஏற்று, தாமே அந்தச் சமாதான திட்டத்தை முன்னகர்த்திச் சென்றார். ஊடகங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்த அவதூறுச் சட்டத்தை இரத்துச் செய்தார். 2015ஆம் ஆண்டு மீண்டும் பிரதமராகி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு, இணைஅனுசரணை வழங்கினார். இப்போது அவரது தலைமையிலேயே அடக்குமுறை வலுப்பெறுகிறது.

சர்வதேச ரீதியில் இதனால் அரசாங்கம் சில நெருக்கடிகளை சந்திக்கப் போகிறது. மனித உரிமைகள் பிரச்சினைகள் காரணமாக, குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் காரணமாக, இலங்கைக்கு வழங்கி வரும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை இரத்துச் செய்வது தொடர்பாக ஆராயுமாறு கடந்த வருடம் ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்டுக் கொண்டது.

ஓகஸ்ட் மாதம், சில ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி ரணிலை சந்தித்தனர். கருத்துச் சுதந்திரம் மற்றும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமை ஆகியவற்றை குறிப்பிட்டு, அரசாங்கம் ஜீ.எஸ்.பி வரிச் சலுகை, மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் அப்போது கூறியிருந்தனர். இராஜதந்திர பாணியில் வார்த்தைகளைப் பாவித்து அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்தின் அர்த்தத்தை, அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

விரைவில், இலங்கைத் தொடர்பாக அறிக்கை வெளியிடப்படப்பட இருப்பதாகவும், அந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு ஜி.எஸ்.பி வரிச் சலுகையை தொடர்ந்து வழங்குவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் ஐரோப்பிய ஒன்றித்தின் தவிசாளர் உர்சுலா லெயென் தெரிவித்து இருந்தார். வருடமொன்றுக்கு ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு சுமார் 500 மில்லியன் டொலர் பெறுமதியான வரிச் சலுகை வழங்குகிறது.

இந்த அச்சுறுத்தலின் காரணமாகவே, அரசாங்கம் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானியை வாபஸ் பெற்றது போலும்! ஆனால், உலகத் தலைவர்கள் கருத்துச் சுதந்திரம், எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமை விடயத்தில், தொடர்ந்தும் இலங்கைத் தலைவர்களை எச்சரித்து வருகின்றனர்.



## வாழ்வியல் தரிசனம்

வறுமை நிலையில் வாழும் பிள்ளைகளுக்கு, தாங்கள் முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் வலுப்பெறுகின்றது.

கல்விமான்கள், தொழிலதிர்கள், தேசத்தலைவர்கள் எனப் பலரும் தமது இளமைக் காலத்தில் வறுமையில் எதிர்நீச்சலடித்தே முன்னேறினார்கள். சும்மா இருப்பவர்கள், வாழ்க்கையை வீணடிக்கிறார்கள்.

கல்வி ஒருசாராருக்கு மட்டும் உரித்தானதல்ல; ஆபிரிக்காவில் வாழும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த சிறுவனின் விடாமுயற்சியை தொலைக்காட்சியில் பார்த்தேன். தினமும் 50 கிலோ மீற்றர் தூரம், வெப்பம் மிகுந்த வெளியில் நடந்து சென்று, படித்து வருகின்றான். தண்ணீர் வளம் குறைந்த பிரதேசம்; தண்ணீர் உள்ள இடம் நாடிக் குடித்தபடியே, நடந்து சென்ற காட்சி மனதைத் தொட்டது.

அவனை அந்தக் கிராம மக்கள் அன்புடன் படிக்க அனுப்புவார்கள். இரவில் விளக்கின் ஒளியில் கல்வி கற்றான். எந்த வசதியும் இல்லாத பிரதேசம் அது!

எம்மவர்கள் இதை உணர்ந்தால், கல்வி கற்பதில் உத்வேகம் பெறுவார்கள்.

மனோ வலிமை இருந்தால், காரியசித்தி உண்டாகும். வெல்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சிந்தனையில் மாற்றம் முக்கியமானது

மக்களின் மனங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களே, பிரதேசத்தினதும் நாட்டினதும் மாற்றத்துக்கு வழியை ஏற்படுத்தும்.

நம்முடைய பயன்பாடுகளால் உருவாகின்ற மிச்சங்கள், கழிவுகள் எனப்படுகின்ற குப்பைகளாக மாறுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேசங்களுக்குள் வாழும் ஒவ்வொருவரும், தங்களால் உருவாகும் கழிவுகளை சரியான முறையில் அகற்றுவது முக்கியமானது. அந்தக் கழிவுகளை சேகரிக்கும் உள்ளூராட்சி மன்றங்கள், அவற்றை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில், தரம் பிரித்து பசளைகளாகவும் ஏனைய உற்பத்திகளாகவும் மாற்றுகின்றன.

ஆனால், ஒரு சில தனிப்பட்ட நபர்கள், தங்களது வீட்டு கழிவுப் பொருட்களை, வீதிகளில் வீசுகின்ற சந்தர்ப்பங்களில், அவை சூழலை அசுத்தப்படுத்துவதுடன் அருவருக்கத்தக்கதாகவும் அமைவதுடன் ஏனையவர்களையும் அசௌகரித்துக்கு உள்ளாக்குகின்றது.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவல் காலங்களில், தாங்கள் பயன்படுத்திய முகக் கவசங்களைக் கூட, சரியான முறையில் அகற்றுவதில் கரிசினையில்லாமல், வீதிகளில் வீசுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இப்போதும் சிலர் அவற்றை, தாம் நினைத்த இடங்களில் வீசும் நிலைமை இருந்தே வருகிறது.

கழிவுகள் வீதிகளிலும், நீர் நிலைகளிலும் வீசப்படுவதால், சூழல் மாசடைவதுடன் நீர்நிலைகளும் மாசடைகின்றன. அது போலவே, கடற்கரைகளில் தங்களுடைய கழிவுப் பொருட்களை வீசும் போது, கடல்சார் பிரதேசங்களும் அலங்கோலமாகமாவதுடன் மாசுமடைகிறது. இது சிந்தனை மாற்றத்தின் மூலமே, சீர் செய்யப்படக்கூடியது.

இதைத்தவிர, தண்டனை வழங்கும், சீரான நிர்வாக முறைமை இலங்கையில் கிடையாதே!

உ. ஜெயந்தன்

திருப்பூர்

# நித்யானந்தாவின் சாயலில் இருந்ததால் விபரீதம்



நித்யானந்தா என நினைத்து, அவரது சாயலில் இருந்த மற்றுமொரு சாமியாரின் ஆசிரமம், மக்களால் இடித்து சேதப்படுத்தப்பட்ட சம்பவம் திருப்பூரில் இடம்பெற்றுள்ளது.

கோவை, செல்வபுரத்தை சேர்ந்தவர் ‘சாமியார் பாஸ்கரானந்தா’. இவர் காரணம்பேட்டை அருகே ஆசிரமம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவர் நித்தியானந்தாவில் சாயலில் இருப்பதால், இவர்தான் நித்தியானந்தா என நினைத்து, அப்பகுதி மக்கள் சிலர் இவரது ஆசிரமக் கட்டடங்களை முழுமையாக இடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், ஆசிரமத்தில் இருந்த 25 பவுன் தங்க நகைகளைச் திருடிச் செற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு, சாமியார் பாஸ்கரானந்தா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் (03) புகார் அளித்துள்ளார்.



மகாராஷ்டிரா

## நடனம் ஆடிய இளைஞர் மரணம்

### தகவல் அறிந்த தந்தையும் மரணம்

இந்தியாவின் வடமாநிலங்களில் நவராத்திரி பண்டிகையின் முக்கிய நிகழ்வாக ‘கர்பா‘ என்ற நடன நிகழ்ச்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிகழ்வின் போது மக்கள் அனைவரும் அரங்கில் ஒன்று திரண்டு, வட்டமிட்டு நடனமாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம், பால்கர் மாவட்டத்திலுள்ள விரார் என்ற பகுதியில் சனிக்கிழமை (01) இடம் பெற்ற ‘கர்பா’ நிகழ்ச்சியில் நடனமாடிக்கொண்டிருந்த 35 வயதான மனிஷ் என்பவர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து மனிஷை உடனடியாக அவரது தந்தையும் அங்கிருந்த சிலரும் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் “மனிஷ் வரும் வழியிலேயே உயிரிழந்து விட்டார்” எனத் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவரது தந்தையும் மருத்துவமனையிலேயே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் “இருவரும் இருதயக் கோளாறு காரணமாக உயிரிழந்துள்ளனர்” என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உத்தரகண்ட்

## பனிக்குள் சிவன் கோவில்



உத்தரகண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் சுமார் 3,680 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள துங்கநாத் கோவில்,‘ உலகின் மிக உயரமான சிவன் கோவிலாகக் கருதப்படுகின்றது.

இக்கோவில் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையானது என்றும் பல பனிச்சரிவுகள், பூகம்பங்களைச் சந்தித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெண்பனி மலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள இக் கோவிலின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசம்

## 5 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த சிறுவன்

12 வயது சிறுவன், 5 வயது சிறுமியை, பாலியல் வன்புணர்வு செய்த அதிர்ச்சி சம்பவம் உத்தரப் பிரதேசத்தில் அரங்கேறியுள்ளது.

உக்ஹைதி என்ற பகுதியில் உள்ள கிராமம் ஒன்றிலேயே, கடந்த இரண்டாம் திகதி, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று தனது வீட்டின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை, அப்பகுதியில் வசிக்கும் சிறுவன் ஏமாற்றி, வேறு ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வு செய்துள்ளான்.

இதனால் பாதிப்புக்குள்ளான சிறுமி, மிகுந்த சிரமத்துடன் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர் இது குறித்து தனது வீட்டாரிடமும் தெரிவித்துள்ளார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த



அவரது குடும்பத்தினர், இது குறித்து பொலிஸ் நிலையதில் புகார் அளித்ததையடுத்து பொலிஸார், சிறுவனைக் கைது செய்து, சிறார் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா

## உலக சாதனையை நோக்கி ‘ஹரியானா‘



உலகின் மிகப்பெரிய ஃபாரி பூங்கா (safari park) ஹரியானாவின் ஆரவல்லி மலைத்தொடரில் உருவாக்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கருத்துத் தெரிவிக்கையில், “தற்போது உள்ள மிக பெரிய ஃபாரி பூங்கா ஷார்ஜாவில் உள்ளது. இப் பூங்கா (sharjah safari park) 2022 பெப்ரவரி மாதம் திறக்கப்பட்டது. இது சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஹரியானாவில், ஆரவல்லி மலைத்தொடரில் அமைக்க திட்டமிட்டுள்ள பூங்கா இதை விட 5 மடங்கு (10,000 ஏக்கர்) பெரியதாக இருக்கும்” என்றார்.

கர்நாடகா

## ஊழலில் கர்நாடகாவுக்கு முதலிடம்

காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, ‘பாரத் ஜோடோ யாத்ரா‘ என்ற பெயரில் பாத யாத்திரையை மேற்கொண்டு வருகின்றார்.

இப்பாதையாத்திரையின் போது, கர்நாடகா சென்ற ராகுல் காந்தி “இந்தியாவிலேயே அதிக ஊழல் நிறைந்த அரசாக கர்நாடகா உள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினரிடம் இவ் அரசு 40% இலஞ்சம் வசூலிக்கிறது” எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், “இது குறித்து கர்நாடக



ஒப்பந்ததாரர்கள் பிரதமர் மோடிக்கு தெரியப்படுத்திய போதும் அவர் வழக்கம்போல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை” எனத் தெரிவித்துள்ளார்.

திரும்பிப் பார்ப்போம்...

## ஆழமாகப் பதிந்த வரலாற்றுத் தடங்கள்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், அந்தப் பதவியிலிருந்து இன்றுடன் (ஒக்டோபர் 05) விடைபெறுகிறார்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில், எட்டு வருட அர்ப்பணிப்பான சேவையை நிறைவு செய்து, இன்று விடைபெறுகிறார் பணிப்பாளராகப் பதவிவகித்த அருளானந்தம் உமா மகேஸ்வரன்.

2014ஆம் ஆண்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக இணைந்து, 2015ஆம் ஆண்டு பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். அதன் பலனாக, திணைக்களத்தில் பாரிய மாற்றங்களை, புரட்சிகளை செய்து, திணைக்களத்தின் வரலாற்றில் அசைக்கமுடியாத ஆளுமையின் அடையாளமாகத் திகழ்கின்றார்.

‘வந்தோம் வாழ்ந்தோம்’ என்பதும் வாழ்க்கைதான். ‘எதைச் சாதித்தோம்’ என்ற கேள்விக்கு பலரிடம் விடை இல்லை. செயல் வீரர்கள் அதிகம் பேசிக்கொள்வதில்லை. ஆனாலும், அவர்கள் கடந்து செல்லும் பாதையில் ஆழமான, அர்த்தம் மிக்க பல வரலாற்றுத் தடங்கள் பதிக்கப்பட்டு இருப்பதை திரும்பிப் பார்த்தால் கண்டுகொள்ள முடியும்.

கோவில்களின் வளர்ச்சிக்கு, அரசியல்வாதிகளின் அழுத்தங்களையும் தாண்டி, அர்ப்பணிப்பான பங்களிப்பு வழங்குவதற்கு பின்நின்றதே கிடையாது. பிரதேச வாதம் என்ற பேச்சுக்கே, இந்த ஆளுமையாளனின் அகராதியில் இடமில்லை. ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ என்ற சங்கத் தமிழனின் வார்த்தையை நெஞ்சத்தில் இருத்தி, செயலாற்றிய பெருந்தகையாளன் உமாமகேஸ்வரன் ஆவார்.

இவரது காலத்தில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், உருவத்தில் மாறியது; உள்ளடக்கத்தில் மாறியது; செயற்பாட்டில் மாறியது. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பெயரும், விருதுக்குப் பரிந்துரை செய்யப்படும் அளவுக்கு நிர்வாகச் செயற்பாடுகள், உமாமகேஸ்வரன் காலத்தில் உயர்ந்திருந்தன என்பதற்கு பெற்றுக்கொண்ட விருதுகள் சான்றுபகர்கின்றன.

இந்து சமய அறநெறிக் கல்வி ஆழமானது; அகலமானது. அழகுறக் கற்றுக்கொண்டால் அற்புதமானது என்பதை, எல்லோரையும் பலவித செயற்றிட்டங்களின் ஊடாக உணரச்செய்தவர். எந்த மதத்தவர்களின் அறநெறிப் பாடசாலைகளும் செய்யாத சாதனையை, இந்து சமய அறநெறிப் பாடசாலைகளைச் செய்ய வைத்த பெருமை பணிப்பாளர் உமாமகேஸ்வரனைச் சாரும்.

இளம் இந்து சிறார்களின் ஆளுமைகளை வெளிக்கொணரும் சாதனையாக அமைந்த தேசிய ஆக்கத்திறன் விருது; அறநெறிப் பாடசாலைகளின் திறம்பட்ட நிர்வாகங்களுக்கான தேசிய கௌரவம்; அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய சேவை மேன்மை விருது ஆகியவை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாதனையின் ஒரு மைல்கல்.

இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவகத்தை, வடக்கில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கற்கைகள் நிறுவகமாகவும் கிழக்கில் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவகமாகவும் ஏனைய மாகாணங்களுக்காகத் தலைநகரில் சேர் பொன். இராமநாதன் கற்கைகள் நிறுவகமாகவும் அமைத்து, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் நின்று நிலைக்கும் பணிகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அரும்பணியின் பிதாமகன் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் ஆவார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து பண்பாட்டு நிதியத்தை செழிப்படையச் செய்த பெருமையும், அந்த நிதியம் மூலமாக காலத்தால் அழியாத பல செயற்பாடுகளை முன்னெடுத்த பெருமையும் இவரையே சாரும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மாநாடு, உலக அரங்கையே ஒன்று கூட்டிய முருகபக்தி மாநாடு, கலைஞர்களுக்கான கௌரவம், ஆராய்ச்சி மாநாடுகள், நாட்டாரியல் வழக்காறுகளுக்கு முக்கியத்துவம் தரும் செயற்பாடுகள், பொங்கல் விழா, புத்தாண்டு விழா, நவராத்திரி விழா என முத்திரை பதித்த நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பாய் இருந்தவர் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் ஆவார்.

அருள்நெறி விழா, கந்தபுராண எழுச்சி விழா, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தோடு இணைந்து தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் என அத்தனையும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளையும் ஆன்மிகத்தையும் இணைத்து ஒரு கோட்டில் பதிக்க வைத்தவை. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் நின்று நிலைப்பவை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடக்கப்பட்ட காலம் முதல், ஆராய்ச்சி மற்றும் அறநெறி சார்ந்த நூல் வெளியீடுகள் சிறப்புற நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஆனாலும், பணிப்பாளர் உமாமகேஸ்வரனின் காலத்தில் இத்துறைகளில் புதுமெருகைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்படி, இந்த ஆளுமையாளனின் செயற்பாடுகளை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். யாருக்கும் அழுத்தம் கொடுத்து வேலை வாங்க விரும்பாத மனோபாவம்; “எடுக்கின்ற சம்பளத்துக்கு கொஞ்சமாவது வேலை செய்யுங்கள்; அது போதும்” என்பதே, கடமையாற்ற வருபவர்களிடம் அவர் முன்வைக்கும் ஒரேயொரு கோரிக்கையாகும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடனான பயணங்களில் இனி, இந்தப் பெருந்தகையாளனோடு எமக்கு இல்லை என்பதை எண்ணும்போது இதயம் கனக்கிறது. ஆனாலும், இப்படியோர் ஆளுமை மிக்க பண்பாளன் காலத்தில், நாமும் பணிபுரிந்தோம் என்பதில் பெருமை கொள்வோம்.

‘விபுலமாமணி’, ‘கலைச்சுடர்’
வி.ரி சகாதேவராஜா,
சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றம், முன்னாள் தலைவர்,
காரைதீவு.

சவுதி

# 20 நாடுகளுக்கு அவசர உதவி

`உலகளாவிய உணவு நெருக்கடிக்கு 48 நாடுகள் ஆளாகியுள்ளதாக` சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் ஜார்ஜீவா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "உலகளாவிய உணவு நெருக்கடியைச் சமாளிக்க 20 நாடுகளுக்கு அவசர உதவி தேவைப்படலாம். அத்துடன் அரபு நாடுகளில் சுமார் 14 கோடி மக்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு ஆளாகியுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்நிலைமைகளை எளிதாக்கும் வகையில் உணவு வர்த்தகக் கட்டுப்பாடுகளை எதிர்த்து சர்வதேச நாணய நிதியம் குரல் கொடுக்கும் " என்றார்.







பிரித்தானியா

## தந்தையிடமிருந்து வாடகை வசூலிப்பு

பிரித்தானியாவின் மகாராணி 2ஆம் எலிசபெத்தின் மறைவுக்குப் பின்னர், அவரது சொத்துக்கள் பல முக்கிய ராஜகுடும்ப உறுப்பினர்கள் வசம் கைமாறியுள்ளன.

அந்த வகையில் மன்னர் சார்லஸுக்கு மிக நெருக்கமான 'Highgrove' மாளிகை உட்பட சுமார் 345 மில்லியன் பவுண்டுகள் மதிப்பிலான கார்ன்வால் தோட்டம் தற்போது வேல்ஸ் இளவரசர் வில்லியம் வசம் உள்ளது.

இத் தோட்டமானது மொத்தம் 128,000 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும், இத் தோட்டத்திலிருந்து கடந்த ஆண்டு மாத்திரம் 21 மில்லியன் பவுண்டுகள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சார்லஸ் மன்னரானதும், இந்த தோட்டமானது அவரது மகன் வில்லியம் வசமானதாகவும், எனினும் அதில் அமைந்துள்ள Highgrove மாளிகையை நீண்ட கால குத்தகைக்கு மன்னர் சார்லஸ் எடுத்துள்ளார் எனவும், இதனால் ஆண்டுக்கு 7,00,000 பவுண்டுகள் தொகையை மன்னர் சார்லஸ் ,இளவரசர் வில்லியத்திற்கு அளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாளிகை கடந்த 1980ஆம் ஆண்டில் இருந்து சார்லஸின் குடும்ப மாளிகையாக அமைந்துள்ளது.

மேலும், தென் லண்டனிலுள்ள ஓவல் கிரிக்கெட் மைதானமும் தற்போது வேல்ஸ் இளவரசர் வில்லியம் வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## பாகிஸ்தானுக்கு தலிபான் தடை



ஆப்கானிஸ்தானில் கடந்த ஓராண்டாகத் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் பாகிஸ்தான் ரூபாய்களுக்கு திடீர் தடை விதித்து தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தலிபான் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆப்கானிஸ்தானில் நிதி பரிவர்த்தனைகளில் பாகிஸ்தானிய ரூபாயைப் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ளூர்வாசிகளும், வர்த்தகர்களும் பாகிஸ்தானிய ரூபாயை அன்றாட செலவினங்களுக்காகப் பயன்படுத்தி வரும் நிலையில் தலிபான் அரசு இந்நடவடிக்கையை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் உள்ள இலக்குகளைத் தாக்க, அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் பாகிஸ்தானின் வான்வெளியைப் பயன்படுத்த பாகிஸ்தான் அரசு அனுமதிப்பதாகவும், இதற்காகப் பெரும் தொகையைப் பணத்தை பாகிஸ்தான் பெற்றுள்ளதாகவும் தலிபான்கள் குற்றம்சாட்டி வந்த நிலையிலேயே இவ் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

உக்ரேன்

## உற்சாகத்தில் உக்ரேன்



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் முதல் உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் உக்ரேனின் பெரும்பாலான பகுதிகளை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளனர்.


இதனையடுத்து கைப்பற்றப்பட்ட பகுதிகள், ரஷ்யாவுடன் இணைக்கப்படும் என கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்தார்.

இந்நிலையில் ரஷ்ய படையினரிடமிருந்து உக்ரேனின் முக்கிய நகரங்களை உக்ரேன் இராணுவம் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ரஷ்யாவிற்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

இது குறித்து உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி "லைமன் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் சில, ரஷ்ய படைகளிடம் இருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்டுள்ளது. எங்கள் இராணுவத்திற்கு மிக்க நன்றி" எனக் கூறி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

### இயற்பியலுக்கான நோபல் பரிசு;

## மூவருக்குப் பகிர்ந்தளிப்பு




மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நிகழ்வாண்டிற்கான நோபல் பரிசுகள் நேற்று முன்தினம்(03) முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஸ்வாண்டே பாபோவிற்கு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு (Svante Paabo ) நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம் (04) இயற்பியலுக்கான நோபல் பரிசு பிரான்ஸின் அலியான் அஸ்பெக்ட், அமெரிக்காவின் ஜோன் கிளாசர் மற்றும் ஆஸ்திரியாவின் ஷிலிங்கர் ஆகிய மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




சீனா

## மொழிபெயர்ப்புக்கு கூகுள் முற்றுப்புள்ளி

கூகுள் நிறுவனமானது, சீனாவில் தமது சேவைகள் பலவற்றை நிறுத்தி வந்த நிலையில், தற்போது மொழி பெயர்ப்புச் சேவையையும் நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

குறைவான பயன்பாடு, மற்றும் சீன மொழியை மொழிபெயர்ப்பதில் கூகுளை விடவும் உள்நாட்டுச் செயலிகள் சிறந்து விளங்குவதுமே இதற்கான காரணமாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக சீனாவில் இருக்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கூகுள் அளிக்கும் சேவைகளை விட மிகச் சிறப்பான சேவைகளை சீன மக்களுக்கு வழங்கி வருவதால், கூகுளினால் சீனாவில் சிறந்து விளங்க முடியாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் தொகை அதிகம் கொண்ட சீனாவில் மொழிபெயர்ப்பு சேவையை நிறுத்தியிருப்பது கூகுள் நிறுவனத்திற்கு மிகப் பெரிய பின்னடைவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்கா

### அரசு தலைமை அலுவலகத்தின் மீது

## குண்டுத் தாக்குதல்

### சுகாதாரத்துறை அமைச்சர் உட்பட 20 பேர் உயிரிழப்பு



சோமாலியாவில் நேற்று முன்தினம் (04) பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கார் குண்டுத் தாக்குதலில் அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹிரன் மாகாணத்தில் உள்ள பெலேட்வேய்ன் நகரின் அரசு தலைமை அலுவலகத்திலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் சுகாதாரத்துறை அமைச்சர் சகாரியே மொஹமட் (Zakariye Mohamed )மற்றும் அதிகாரிகள் உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 36 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக் கொடூர தாக்குதலுக்கு அல்-ஷபாப் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

அல்-ஷபாப் அமைப்பின் முக்கிய தலைவன் அப்துல்லாவை,அண்மையில் சோமாலியப் பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்ற நிலையில், அதற்குப் பதிலடியாக இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

### முதுகு உபாதையால்

## உலகக் கிண்ணத்திலிருந்து விலகிய பும்ரா



முதுகுப் பகுதி உபாதையொன்றால், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா விலகியுள்ளார். ஏறத்தாழ ஆறு வாரங்களுக்கு போட்டிகளில் பும்ரா பங்கேற்கமாட்டார் எனத் தெரிகிறது. இந்நிலையில் பும்ராவை மேலதிக வீரர்கள் பட்டியலிலுள்ள மொஹமட் ஷமி, தீபக் சஹர் ஆகியோர் பிரதியிட வாய்ப்புகள் காணப்படுவதோடு, மொஹமட் சிராஜ்ஜுக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.



### மர்ஹூம் எப்.எம். றஜாத் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடர்:

## சம்பியனானது சாய்ந்தமருது மியன்டாட் கழகம்

எம்.என்.எம். அப்ராஸ்

மர்ஹூம் எப்.எம். றஜாத் ஞாபகார்த்த கிரிக்கெட் வெற்றிக் கிண்ண இவ்வாண்டு தொடரில் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அட்டாளைச்சேனை பொது மைதானத்தில் கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற அட்டாளைச்சேனை பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான இறுதிப் போட்டியில் வென்றே மியன்டாட் சம்பியனாகியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மியன்டாட், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. 144 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 15.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களையே பெற்று 52 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மியன்டாட்டின் யூ.எல்.எம். ஆசிக் தெரிவானார்.

### விமானத்தை தவறவிட்டமை:

## உலகக் கிண்ண குழாமிலிருந்து நீக்கப்பட்ட ஹெட்மயர்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமிலிருந்து ஷிம்ரோன் ஹெட்மயரை அவ்வணி நீக்கியுள்ளது.

மீண்டும் பதிவு செய்யப்பட்ட அவுஸ்திரேலியாவுக்கான விமானத்தை ஹெட்மயர் தவறவிட்டமையைத் தொடர்ந்தே குழாமிலிருந்து ஹெட்மயர் நீக்கப்பட்டுள்ளார்.

ஹெட்மயரை குழாமில் ஷமராஹ் ப்ரூக்ஸ் பிரதியிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பயணமாகவிருந்த ஹெட்மயர், தனது விமானத்தை தனிப்பட்ட காரணங்களால் நேற்று முன்தினம் மாற்றுமாறு கோரியிருந்ததுடன், பின்னர் தான் பயணிக்கவில்லை என அறிவித்திருந்தார்.


## யுனைட்டெட்டிலிருந்து வெளியேறவுள்ள றொனால்டோ



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவை, கழகத்திலிருந்து அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் வெளியேற அக்கழகம் அனுமதிக்கும் எனத் தெரிகிறது.

யுனைட்டெட்டின் ஆரம்ப கட்டத் திட்டங்களில் 37 வயதான றொனால்டோ இருந்தபோதும், வழமையாக போட்டிகளை ஆரம்பிக்காத நிலையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வு பெறவுள்ள கொன்ஸலோ ஹியூகைன்



ஐக்கிய அமெரிக்காவின் இவ்வாண்டு மேஜர் லீக்கின் இன்டர் மியாமி அணியின் பருவகால முடிவுடன் அவ்வணியின் முன்களவீரரான கொன்ஸலோ ஹியூகைன் ஓய்வு பெறவுள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட், இத்தாலிய சீரி ஏ கழகங்களான ஜுவென்டஸ், நாப்போலி, ஏ.சி. மிலன், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி ஆகியவற்றுக்காக ஹியூகைன் விளையாடியுள்ளார்.

ஆர்ஜென்டீனாவுக்காக 75 போட்டிகளில் 31 கோல்களைப் பெற்ற ஹியூகைன், இறுதியாக 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் விளையாடியிருந்தார். கழகங்களுக்காக 707 போட்டிகளில் 333 கோல்களைப் பெற்றதோடு, 113 கோல்களைப் பெற உதவியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 05 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.